கலாமின் விதைகள் வாட்சப் குழு
கு.கார்த்திக்குமார் - 9688389861

# கிராம நிர்வாக அலுவலர் தேர்வு-1

1. கிராம நிர்வாக அலுவர் நேரடி தேர்வு மூலம் தேர்வு செய்யப்படும் நபர்கள் ஆண்டின் எந்த எந்த மாதம் 21 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும் ?
ஜூலை மாதம் முதல் நாள்

2. கிராம நிர்வாக அலுவர் நேரடி தேர்வுக்கான அதிக பட்ச வயது வரம்பு என்ன?
30 வயது முடிவுற்றவர் அல்லது முடிவுறக்கூடியவர்,
40 ஆண்டுகள் - பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு அல்லது அட்டவணை வகுப்பு மற்றும் பழங்குடி இனத்தை சார்ந்தவர்கள்

3. கிராம நிர்வாக அலுவலராக நிர்ணயிக்கப்படும் ஒவ்வொருவரும் பணியில் சேர்ந்த நாள் முதல் ஒரு மாதத்திற்குள் பிணைத்தொகையாக செலுத்த வேண்டிய தொகை என்ன? பிற்படுத்தப்பட்டோருக்கான பிணைத்தொகை ?
ரூ.2000/-
பிற்படுத்தப்பட்டோர் - ரூ.1000/-

www.Padasalai.Net

4. கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படும் ஒவ்வொருவரும் எத்தனை ஆண்டுகளுக்குள் அரசு அளிக்கும் பயிற்சிகளில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் ?
3 ஆண்டுகள்

5. கிராம நிர்வாக அலுவருக்கான பணிகள், கடமைகள் குறித்த விவர அட்டவணை பற்றிய அரசாணை எண் மற்றும் வெளியிடப்பட்ட நாள் ?
அரசாணை எண். 581 நாள் : 03/04/1987

6. புல எண் என்றால் என்ன?
ஒவ்வொரு மாவட்டமும் பல வட்டங்களாகவும் (taluk) ,வட்டங்கள் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கும், கிராமங்களின் கீழ்
நிலங்கள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு இலக்கம் இடப்படும். அதற்குப் புல எண் (SURVEY NUMBER) என்று பெயர்.

7. **நிலம் தொடர்பான விவரங்கள் எங்கு பராமரிக்கப்படுகின்றன ?**
பதிவுத்துறை
வருவாய்த்துறை

8. **நிலத்திற்கான விவரங்கள் எத்துறையில் காணப்படும் ? அவை யாவை ?**
வருவாய்த்துறை

பட்டா (patta)
சிட்டா(chitta)
அடங்கள்(adangal)
"அ" பதிவேடு("A" register)
நிலத்திற்கான வரைபட எல்லை (FMB)

9. **பட்டா என்றால் என்ன? பட்டாவில் காணப்படும் விவரங்கள் ?**
நிலத்தின் உரிமை நமக்கு தான் இருக்கிறது என்பதற்கான ஆதாரம் பட்டாவாகும். பட்டாவை வைத்துதான் ஒரு நிலத்தின் உரிமை யாருக்கு என்பதென முடிவு செய்யப்படுகின்றது,
1.மாவட்டத்தின் பெயர், வட்டத்தின் பெயர் மற்றும் கிராமத்தின் பெயர்.
பட்டா எண்
உரிமையாளர் பெயர்
புல எண்ணும் உட்பிரிவும் (SURVEY NUMBER AND REGISTRATION)
நன்செய் நிலமா? அல்லது புன்செய் நிலமா?
நிலத்தின் பரப்பு மற்றும் தீர்வை

10. **சிட்டா என்றால் என்ன ?**
ஒரு தனி நபருக்கு குறிப்பிட்ட கிராமத்தில் எவ்வளவு நிலம் இருக்கிறதென்று அரசாங்கம் வைத்திருக்கும் பதிவேடு. இதில் சொத்தின்
உரிமையாளர் பெயர் ,பட்டா எண்கள், நிலம் நன்செய் அல்லது புன்செய் பயன்பாடு, தீர்வை கட்டிய விவரங்கள் எல்லாம் இருக்கும்.

11. **அடங்கல் என்றால் என்ன ?**
ஒரு கிராமத்தில் இருக்கிற மொத்த சர்வே எண்கள் அடங்கிய பதிவேடு. இதில் குறிப்பிட்ட சர்வே என்னுக்கு உரிய நிலம் யார் பெயரில் இருக்கிறது. பட்டா எண் மற்றும் நிலத்தின் பயன்பாடு என்பன போன்ற விவரங்கள் இதில் இருக்கும்.

12. "அ" பதிவேட்டில் காணப்படும் விவரங்கள் என்ன ?

பழைய நில அளவை எண், உட்பிரிவு எண். (surver number and subdivision)

ராயத்துவாரி (அ), சர்க்கார் (ச) ,அல்லது இனாம் (இ) நன்செய் (ந), புன்செய் (பு), மானாவாரி (மா), தீர்வு ஏற்படாத தரிசு (தீ.ஏ.த), புறம்போக்கு பட்டா எண் மற்றும் பதிவு பெற்ற உடைமையாளரின் பெயர்

நிலத்தின் பரப்பு மற்றும் தீர்வை போன்ற விவரங்கள் இருக்கும்.

13. கிரயப் பத்திரத்தில் காணப்படும் விவரங்கள் யாவை ?

எழுதிக்கொடுப்பவரின் பெயர் , முகவரி

எழுதி வாங்குபவரின் பெயர், முகவரி

எவ்வளவு அளவு

எவ்வளவு தொகைக்கு விற்கப்படுகிறது

சொத்து விவரம்

14. நிலத்தை வாங்கும்போது சார் பதிவாளர் அலுவலகத்தில் எந்த பிரிவின் கீழ் பதிவு செய்ய வேண்டும் ?

survey number and subdivision

www.Padasalai.Net

15. கிரயப் பத்திரத்தில் சொத்து விற்பவரின் புகைப்படம் மற்றும் வாங்குபவரின் புகைப்படம் ஒட்டும் முறை நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் ?

01/07/2006, 18/05/2009 முதல் இந்த முறையிலும் மாற்றம் செய்யப்பட்டு சொத்து வாங்குபவரின் புகைப்படம் இரண்டிற்கு பதிலாக ஒன்று ஒட்டினால் போதும் என்ற நடைமுறைக்கு வந்தது

16. "அ" பதிவேட்டின் உள்ளடக்கம் என்ன?

இது ஒவ்வொரு வகையின் கீழ் உள்ள நிலத்திப் பரப்பும், தீர்வை வீதத்தையும் காட்டுகிற "அ" பதிவேட்டின் தொகுப்பாகும்

அரசு நிலம் (வகைப்பாடு), அரசின் கட்டுபாட்டில் உள்ளவை

அரசின் கட்டுபாட்டில் இல்லாதவை என தனித்தனியே காட்ட வேண்டும்.

17. "B" பதிவேடு என்றால் என்ன?

இது இனாம்களின் நிலப்புல பதிவேடு ஆகும்

18. "B1" பதிவேடு என்றால் என்ன?

இது நில உரிமைப் பட்டயத்திற்கான நிலப்பதிவேடு - பி பதிவேட்டிலிருந்து வேறுபட்டது ஆகும்.

19. "B1" பதிவேடு பாகம் -1 என்றால் என்ன?

ஜமீன் ஒழிப்பு மற்றும் ராயத்துவாரியாக மாற்றும் சட்டம் 1948(1948ம் வருட XXVI சட்டம்)இன் கீழ் பிரிவு 17(1) (பி) மற்றும் (2)இன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட இனங்களைக் கொண்டதாகும்

20. கிராமக் கணக்கு எண் 3 என்றால் என்ன?

புலன் களின் பதிவுகளின் மாறுதல்களை காண்பிக்கும் வருடாந்திர பதிவேடு ஆகும்.

21. கிராமக் கணக்கு எண் 1 என்றால் என்ன?

இது கிராமத்தின் மாதவாரி - சாகுபடி கணக்கு ஆகும்.

22. கிராமக் கணக்கு எண் 2 என்றால் என்ன?

இது கிராம அடங்கல் கணக்கு எனப்படும்.

அடங்கல் என்பது கைப்பற்று நிலத்தையும் மற்ற அனைத்து வகையான நிலங்களையும் பிரிவுகளாக புலம் உட்பிரிவு வாரியாக

அனைத்து விவரங்களும் காட்டும் ஓர் அதிமுக்கியமான கிராமக் கணக்கு ஆகும்.

www.Padasalai.Net

23. கிராமக் கணக்கு எண் 2க்கு C உள்ளடக்கம் என்றால் என்ன?

வருவாய்த் துறையின் பொறுப்பின் கீழ் உள்ள அரசு புறப்போக்கில் உள்ள மர விவரங்களை காட்டும் பதிவேடு ஆகும். இது 4 பிரிவுகளாகப் பராமரிக்கப்படும்.

24. கிராமக் கணக்கு எண் 2க்கு D உள்ளடக்கம் என்றால் என்ன?

இது கிராமத்தின் நீர்பாய்ச்சப்பட்ட பரப்பின் விவரங்களை காண்பிக்கும் கணக்கு ஆகும். இந்த கணக்கு ஆண்டு முழுவதும் பராமரிக்க வேண்டும்.

24. கிராமக் கணக்கு எண் 2F என்றால் என்ன?

இது அடங்கலின் 18 வது கலம் குறிக்கப்பட்டுள்ள விவரங்கள் சுருக்கம் ஆகும்.

25. கிராமக் கணக்கு எண் 3 என்றால் என்ன?

புலங்களின் பதிவுகளின் (நிலத்தின்) மாறுதல்களை காண்பிக்கும் வருடாந்திர பதிவேடு

26. **கிராமக் கணக்கு எண் 3A என்றால் என்ன?**
கணக்கு 3ல் கைப்பற்று நிலங்களில் ஏற்பட்ட மாறுதல்களின் சுருக்கம் ஆகும்.

27. **கிராமக் கணக்கு எண் என்றால் என்ன ?**
இது அனைத்து அரசிறைக் கழிவு (Beriz Detution)களைக் காண்பிக்கும்
இவை 2 பிரிவுகளில் பராமரிக்கப்படும்
சமய நிலையங்களுக்காகக் கழிக்கப்படுவது
மற்ற காரியங்களுக்காகக் கழிக்கப்படுவது

28. **வஜா கணக்கு என்றால் என்ன ?**
கிராமக் கணக்கு எண் 5
பருவ நிலை பாதிப்பு அடையும் போது நிலவரி தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது.

29. **கிராமக் கணக்கு எண் 6 என்றால் என்ன ?**
தண்ணீர் தீர்வை விதிப்பு பற்றி பதிவேடு ஆகும். பசலி ஜாஸ்தி, தீர்வை ஜாஸ்தி முறையில் விதிக்கப்படும் அபராத கணக்குகள் கணக்கு எண் 6ல் பராமரிக்கப்படும்

www.Padasalai.Net

30. **கிராமக் கணக்கு எண் 6Aக்கு உள்ளடக்கம் என்றால் என்ன ?**
ஒவ்வொரு பட்டாதாரராலும் நீர்ப்பாய்ச்சப்பட்ட தண்ணீருக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை கூட்டி வரும் மொத்தத்தை கிராமக் கணக்கு 10ல் - 2 பிரிவுக்கு எடுத்து செல்லும் பதிவேடாகும். (போஸ்டிங் டிஜிஸ்டர்)

31. **கிராமக் கணக்கு எண் 7 என்றால் என்ன ?**
அனுமதியின்றி புறம்போக்கு தீர்வை விதிக்கப்பட்ட தரிசு மற்றும் தீர்வை விதிக்கப்படாத தரிசு ஆகிய நிலங்களின் அனுபோகம் செய்யப்படும் புலப்பரப்பையும், பல்வகை வருவாய்களையும் அதற்குண்டான மேல் வரிகளும் காட்டப்படும் பதிவேடு ஆகும்.

32. **கிராமக் கணக்கு எண் 8, 8A என்றால் என்ன ?**
கிராமக் கணக்கு 8 2 பிரிவுகளைக் கொண்டது
8A - முதல் பிரிவு முதல் வகுப்பு நீர் நிலைகளைப் பற்றிய விவரங்கள்
8B : இக்கணக்கில் மற்ற நீர் நிலைகள் பற்றிய விவரங்கள் அடங்கும்

33. **கிராமக் கணக்கு எண் 9A என்றால் என்ன ?**
இந்தக் கணக்கு தமிழ்நாடு தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர் வரி சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வருவாயினை காண்பிக்கும் பதிவேடு ஆகும், இக்கணக்கைப் பாய்ச்சல் ஆதாரம் வாரியாக எழுத வேண்டும்.

35. **கிராமக் கணக்கு எண் 10 இல் 1 பிரிவு என்றால் என்ன ?**
பட்டாவாரியான நிலவரித் திட்டத்தினைக் காண்பிக்கும் சிட்டாவாகும்.

36. **கிராமக் கணக்கு எண் 10 இல் 2 பிரிவு என்றால் என்ன ?**
பட்டா வாரியாக கைப்பற்றில் உள்ள நிலங்களுக்கு விதிக்கப்பட வேண்டிய பல்வேறு வகை தீர்வை இனகளின் விவரத்தைக் காட்டும்
பதிவேடாகும்.

37. **கிராமக் கணக்கு எண் 10C என்றால் என்ன ?**
இது இரண்டு பிரிவுகளாகப் பராமரிக்கப்பட வேண்டும்.
பிரிவு 1: வருவாய் பதிவுகளை மாற்றக் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை வட்டாட்சியரால் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்புவது குறித்தான பதிவேடாகும்.
பிரிவு 2: கிராம நிர்வாக அலுவலர் தனிச்சையாக இதே போன்ற இனகளில் பெறப்படும் மனுக்களைக் காட்டும் பதிவேடாகும்.

www.Padasalai.Net

38. **கிராமக் கணக்கு எண் 11 என்றால் என்ன ?**
ஒவ்வொரு பட்டாதாரருக்கும் அளிக்கப்பட்ட பட்ட படிவமாகும்
தற்போது கிராமக் கணக்கு எண் 10ல் 1 கணினி மயமாக்கப்பட்டதால் பட்டா மாறுதல் செய்யும் போது கணினி மூலம் பட்டா நகல் படிவம் கைப்பற்றுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது

39. **கிராமக் கணக்கு எண் 12 என்றால் என்ன ?**
கிராமம் முழுமைக்கும் உள்ள நில வருவாய் நிர்ணயச் சுருக்கமாகும்
இது கணக்கு எண் 2, 2A,3A,5,6,7,9A,10 (1), 10(2) ஆகியவைகளில் உள்ள தொகுப்புகளை இதில் பதிய வேண்டும்

40. **கிராமக் கணக்கு எண் 13 என்றால் என்ன ?**
இது கிராமங்களில் தினசரி வசூல்களைக் காண்பிக்கும் கணக்காகும்.

41. **கிராமக் கணக்கு எண் 14 என்றால் என்ன ?**

ஒவ்வொரு நபரிடமிருந்து (பட்டாதாரர்) வசூலிக்கப்பட்ட தொகையைக் காண்பிக்கக் கூடிய 13ம் எண் கணக்கின் சுருக்கமாகும்.

42. **கிராமக் கணக்கு எண் 14A என்றால் என்ன ?**

14A கணக்கு என்பது 14ம் நம்பர் படிவத்திலேயே தயாரிக்கப்படும் சுருக்கமாகும். பசலி முடிவில் கிராம ரொக்க கணக்குகளை பதிவு செய்திட வேண்டும்.

43. **கிராமக் கணக்கு எண் 14B என்றால் என்ன ?**

வசூலிக்க இயலாதென கருதப்பட்ட பாக்கி விவரங்களை தெரிவிக்கும் விவரப்பட்டியல் ஆகும்.

44. **கிராமக் கணக்கு எண் 14C என்றால் என்ன ?**

இந்தக் கணக்கு அதிக வசூல் விவரங்களை காண்பிக்கும் கணக்காகும். இது 3 பிரிவாகப் பராமரிக்கப்படுகிறது

பிரிவு 1: பசலியிலிருந்து அந்தந்த பட்டாதாரர்கள் கேட்புத் தொகைகளுக்கு மிகுதியாக செலுத்திய தொகை விவரம் ஆகும்.

பிரிவு 2: வசூல் செய்யப்பட்ட தொகை மிகுதியாக இருந்தால் அதே பட்டாதாரருக்கு அடுத்த பசலியில் கேட்பு இல்லாத பட்சத்தில் அந்த தொகையை அவருக்கு திருப்பிக் கொடுக்கலாம். இவ்வாறான விவரங்கள் இதில் காட்டப்படுகின்றன.

பிரிவு 3: இந்தப்பிரிவில் ஒரு பட்டாதாரர் செலுதிய தொகையில் 10 பைசாவுக்கும் கீழ் மிகுதியாக இருந்தால் அதனை அரசுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம்.

45. **கிராமக் கணக்கு எண் 15 என்றால் என்ன ?**

கிராமத்தில் பட்டாதாரர்களிடம் இருந்து வசூல் செய்யப்பட்ட தொகைகள் (கிராமக் கணக்கு எண்13 படி) வங்கியில் செலுத்துவதற்குப் பராமரிக்கப்படும் சுருக்கமான பட்டியலாகும்.

46. **கிராமக் கணக்கு எண் 16 என்றால் என்ன ?**

பசலி வாரியாக ஒவ்வொரு மாதக் கடைசியிலும் ஒவ்வொரு பட்டாதாரர் செலுத்த வேண்டிய கேட்பு வசூல் பாக்கியைக் காண்பிக்கும் கணக்காகும். மாதந்தோறும் இந்தக் கணக்கை தயாரிக்க வேண்டும்.

47. **கிராமக் கணக்கு எண் 17 என்றால் என்ன ?**
ஒரு பட்டாதாரர் செலுத்த வேண்டிய நிலவரித் தொகை தாமதமாக செலுத்தினால் இதற்கு வட்டியாக அபராதம் வசூலிக்கப்படுகிறது. இவை பதிவேட்டில் அதற்குண்டான கேட்பு, வசூல்பாக்கி ஆகிய விவரங்கள் காண்பிக்கப்படும்.

48. **கிராமக் கணக்கு எண் 18 என்றால் என்ன ?**
குடியானவர் தாம் செலுத்த வேண்டிய நிலவரி மற்றும் இதர பாக்கிகளுக்கு அவர்களால் செலுத்தப்பட்ட தொகையைப் பெற்று
கொண்டதற்கு VAO வழங்கும் பற்று சீட்டு ஆகும்.

49. **கிராமக் கணக்கு எண் 19 என்றால் என்ன ?**
VAO ஒவ்வோர் ஊராட்சிக்குட்பட்ட வருவாய் கிராமங்களில் நேரிடும் பிறப்பு, இறப்பு பதிவு செய்ய பதிவாளராக VAO நியமிக்கப்பட்டுள்ளார். (Town panchayat தவிர) இந்தக் கணக்கை புதிய வடிவத்தில் தயாரிக்க வேண்டும்.

50. **கிராமக் கணக்கு எண் 20 என்றால் என்ன ?**
இது மழைக் கணக்கு ஆகும். ஏப்ரல் 1 முதல் மார்ச் வரை உள்ள நிதி ஆண்டு காலத்தில் பராமரிக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் 25ம் தேதி முதல் இக்கணக்கின் முடிவை தெரிவிக்க வேண்டும்.

www.Padasalai.Net

51. **கிராமக் கணக்கு எண் 21 என்றால் என்ன ?**
இது பட்டாதாரர் அல்லது மற்றவரகளுக்கு சொந்தமான கால்நடைகள் குறித்தான கணக்கு . கால்நடைகளின் புள்ளி விபரங்களை 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கணக்கிட வேண்டும்.

52. **கிராமக் கணக்கு எண் 22 என்றால் என்ன ?**
கிராமக் கணக்கு 22 நீக்கப்பட்டது

53. **கிராமக் கணக்கு எண் 23 என்றால் என்ன ?**
இது கிராமத்தில் ராயத்துவாரி உரிமை முறையில் உள்ள பலவகை மதிப்புள்ள கைப்பற்றுகளின் எண்ணிக்கையை காண்பிப்பதாகும்.

54. **கிராமக் கணக்கு எண் 24 என்றால் என்ன ?**

www.Padasalai.Net www.TrbTnpsc.com


இது கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் கனிமங்களைப் பற்றி பதியும் ஆண்டுப் பதிவேடு ஆகும். இந்தக் கணக்கை ஜனவரி - டிசம்பர் வரை பராமரிக்க வேண்டும்.

www.Padasalai.Net


http://www.trbtnpsc.com/2013/09/tnpsc-group-2-group-4-vao-exam-study.html